ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2213/9 - 2021 පෙබරවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2021.02.02

*2213/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.21/78*(xvi)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 97 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2020, திசெம்பர் 15.*

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுவதன்மேல் வலுவுக்குவருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் “ஓய்வூதிய நிதியம்” எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டதுமான பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் ஒழுங்குபடுத்துகை, நிருவாகம் மற்றும் முகாமைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

**ஓய்வூதிய நிதியத்தின் உறுப்பாண்மை**

3. (1) நிரந்தரமானவொரு பதவியை வகிப்பவரும் 1999 செத்தெம்பர் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாகச் சேவையிலுள்ளவருமான ஆணைக்குழுவின் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி ஊழியரொருவர் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துவதற்கும் அதன் உறுப்பினரொருவராக வருவதற்கும் விருப்புத் தெரிவிக்கலாம்; ஆனால் 1999, செத்தெம்பர் 1 ஆந் திகதிக்குப் பின்னர் நிரந்தரமானவொரு பதவிக்கு நியமிக்கப்பட்டவர்களான ஆணைக்குழுவின் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியினருக்கு உறுப்பாண்மையானது கட்டாயமானதாகவிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும்,சொல்லப்பட்ட பதவிக்கு நியமிக்கப்படும் நேரத்தில் அவரது ஓய்வூதிய வயதுக்கு முன்னர் குறைந்தபட்சம் இருபதாண்டுச் சேவையையேனும் கொண்டிராத (நிரந்தரமான) பதவி வகிப்பவர் நிதியத்தின் உறுப்பினரொருவராக வருவதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதாமாண்டு செத்தெம்பர் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாகச் சேவையிலிருந்தவரும் ஓய்வூதிய நிதியத்தின் உறுப்பினரொருவராக வருவதற்கு விருப்புத் தெரிவித்தவருமான ஊழியரொருவர், பிந்தியவொரு தேதியில் தமது முடிபை மாற்றி பல்கலைக்கழகங்கள் சகாய நிதியத்தில் மட்டுமே உறுப்பாண்மையைக் கோருவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(3) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மாதாந்த உதவுதொகையொன்று ஒவ்வோர் உறுப்பினரதும் சம்பளத்திலிருந்து ஓய்வூதிய நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**ஓய்வூதிய நிதியத்தின் நிருவாகம்**

4. (1) (இதனகத்துப் பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவின் செயலாளர், ஓய்வூதிய நிதியத்தின் ஒழுங்குபடுத்துகை, நிருவாகம் மற்றும் முகாமை என்பனவற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(2) செயலாளர், ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன்,ஒன்றில் பொதுவாகவோ அல்லது விசேடமாகவோ, இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் செயலாளரின் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும்படி, புரியும்படி மற்றும் நிறைவேற்றும்படி ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர், செயலாளரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) செயலாளர், ஓய்வூதிய நிதியத்துக்கான பொதுக் கணக்கொன்றையும், ஓய்வூதிய நிதியத்துக்கான ஒவ்வோர் உறுப்பினர் தொடர்பிலும் தனிவேறான கணக்கொன்றையும் திறத்தலும் வைத்திருத்தலும் வேண்டும். அவ்வுறுப்பினர் தொடர்பில் ஓய்வூதிய நிதியத்துக்கான எல்லா உதவுதொகைகளும், ஓய்வூதிய நிதியத்தில் அந்தந்த உறுப்பினரின் தனிவேறான கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். செயலாளர், ஓய்வூதிய நிதியத்தின் பணங்களினது கட்டுக்காப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) 2015.03.17 ஆந் திகதிய 1906/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் தாபிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, சகாய நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற மேற்பார்வைச் சபையானது, ஓய்வூதிய நிதியத்தின் செயற்பாடுகளைக் காலாகாலம் பரிசீலனை செய்வதற்கும் ஓய்வூதிய நிதியத்தின் கொள்கை விடயங்கள்பற்றி ஆணைக்குழுவுக்கு மதியுரையளிப்பதற்கும் பொறுப்பாதல் வேண்டும்.

5. (1) ஓய்வூதிய நிதியத்துக்கான இரண்டு முதலீட்டுக் குழுக்கள் இருத்தல் வேண்டும்; அவையாவன:-

(அ) பாரிய முதலீடுகளாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முதலீடுகளைக் கையாள்வதற்குப் பாரிய முதலீட்டுக் குழு;

(ஆ) சிறிய முதலீடுகளாக ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முதலீடுகளைக் கையாள்வதற்குச் சிறிய முதலீட்டுக் குழு.

(2) பாரிய முதலீட்டுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் தவிசாளர்;

(ஆ) செயலாளர்;

(இ) ஆணைக்குழுவின் நிதிப்பகுதியினது தலைவர்;

(ஈ) ஆணைக்குழுவின் தவிசாளரினால் நியமிக்கப்பட்ட சிரேட்ட முகாமைத்துவக் குழுவிலிருந்து பிரதிநிதியொருவர்.

(3) சிறிய முதலீட்டுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் துணைத்தவிசாளர்;

(ஆ) செயலாளர்;

(இ) ஆணைக்குழுவின் நிதிப்பகுதியினது தலைவர்.

(4) பாரிய முதலீடுகளினதும் சிறிய முதலீடுகளினதும் நிதிசார் வரையறைகள், பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட இயைபான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய வகுத்தமைக்கப்பட்ட ஓய்வூதிய நிதியத்தின் முதலீட்டுக் கொள்கையினது அடிப்படையில், காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) முதலீட்டுக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, குழுக்களின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகைதருவதற்கான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். முதலீட்டுக் குழுக்களின் படிகளாகச் செலுத்தப்பட்ட பணத்தொகைகளும் ஏனைய செலவினங்களும் ஓய்வூதிய நிதியத்தின் பணங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) முதலீட்டுக் குழுவானது, ஓய்வூதிய நிதியத்தின் முதலீட்டுக் கொள்கைக்கிணங்க முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கும் பொருத்தமான முதலீட்டு முடிவுகளை அல்லது பொருத்தமான முதலீடுகளைச் செய்வதற்கும் கிரமமான அடிப்படையில் கூடுதல் வேண்டும்.

(7) பாரிய முதலீட்டுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிபு, ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கும் ஒரு தடவை மேற்பார்வைச் சபைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

**ஓய்வூதிய நிதியத்தின் நன்மைகள்**

6. (1) (அ) இருபதாண்டுகள் அல்லது அதற்கு மேற்படச் சேவையாற்றியுள்ளவரும் ஓய்வுபெறும் வயது வரை சேவையாற்றியுள்ளவருமான ஒவ்வோர் உறுப்பினரும்; அல்லது

(ஆ) இருபதாண்டுகள் அல்லது அதற்கு மேற்படச் சேவையாற்றி சுகவீனம் காரணமாக ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் ஓய்வுபெற்றுள்ளவருமான ஒவ்வோர் உறுப்பினரும்,

அட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவொரு நூற்று வீதத்தினைக்கொண்ட மாதாந்த ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) (அ) ஐம்பத்தைந்து வயதில் ஓய்வுபெறக்கூடியவராகவிருந்து ஆனால் அறுபது வயது வரை தொடர்ந்து வேலை செய்வதற்கு அல்லது இதற்கிடையில் ஓய்வுபெறுவதற்கு விருப்புத் தெரிவிக்கின்றவரான ஆசிரியர் பதவியல்லாத ஏதேனும் பதவியை வகிப்பவருக்கு ஆணைக்குழுவினால் முடிபு செய்யப்படுகின்றவாறாக தகவுக்கேற்ற அடிப்படையில் பணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) சம்பளமற்ற லீவு காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகக் காலப்பகுதியொன்றுக்கான உதவுதொகைகள் பெறப்படாதவிடத்து, செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்காக அத்தகைய காலப்பகுதி, மொத்தச் சேவைக்காலப்பகுதியிலிருந்து குறைக்கப்படுதல் வேண்டும்.

(3) இறக்கின்ற நேரத்தில் இருபதாண்டுகள் அல்லது அதற்கு மேற்படச் சேவையாற்றியுள்ள உறுப்பினரொருவரின் தங்கிவாழுநர்களுக்குப் பின்வருமாறு ஓய்வூதியமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) விதவைக்கு அல்லது விதுரனுக்கு ஓய்வூதியத்தின் ஐம்பது சதவீதம் (50%) செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) மீதி ஐம்பது சதவீதம் (50%) சமமாகப் பிரிக்கப்பட்டு சட்டமுறையான பிள்ளைகள் 18 வயதையடையும் வரை அவர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பயனுகரிகள் தொடர்பாகப் பிணக்கொன்று இருக்குமிடத்து, நீதிமன்றத்தின் முடிபுக்கிணங்க ஓய்வூதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் எந்த உறுப்பினர் ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்த எவரேனும் உறுப்பினருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியம்,அவ்வுறுப்பினர் ஓய்வுபெறுவதன்மேல் அல்லது அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல் தங்கிவாழுநர்களுக்குச் செலுத்தப்படுவதற்கு ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நாளாந்தம் திரளுதலும் மாதாந்தம் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(5) விடயத்துக்கேற்ப, ஓய்வூதியம்பெறுநர் அல்லது தங்கிவாழுநர் அல்லது தங்கிவாழுநர்கள் உயிரோடிருப்பதனையும் அத்தகைய ஓய்வூதியம் பெறுநரினால் அல்லது தங்கிவாழுநர்களினால் உரிமைகோரப்பட்ட ஓய்வூதியத்துக்கு அவர்கள் உரித்துடையோராக இருப்பதனையும் செயலாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒரு பராயமடையாதவருக்குச் செலுத்தப்படற்பாலதான ஓய்வூதியமொன்று அரசாங்க அங்கீகாரம்பெற்ற வங்கியொன்றில் அப்பராயமடையாதவரின் வங்கிக்கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(7) இருபதாண்டுகளைக் கொண்ட சேவைக்காலத்துக்கு முன்னர் ஓய்வுபெறுகின்ற, பதவிவிலகுகின்ற அல்லது சேவையை முடிவுறுத்துகின்ற உறுப்பினரொருவரின் வரவுக்கிருக்கும் தொகையும் வட்டியும், அந்த ஊழியர் ஓய்வுபெறும் அல்லது பதவி விலகும் அல்லது சேவையை முடிவுறுத்தும் நேரத்தில் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(8) இருபதாண்டுகளைக் கொண்ட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்யாத உறுப்பினரொருவர் இறக்கும் பட்சத்தில் அல்லது திருமணஞ் செய்யாதவராகவுள்ள அல்லது திருமணஞ் செய்யாதவளாகவுள்ள உறுப்பினர் ஒருவர் இறக்கும் பட்சத்தில், அத்தகைய உறுப்பினரின் வரவுக்கிருக்கும் தொகையும் வட்டியும் கட்டளைச்சட்டம் 7 இன் ஏற்பாடுகளுக்கமைய செலுத்தப்படுதல் வேண்டும்.

**பெயர் நியமனங்கள்**

7. (1) ஓய்வூதிய நிதியத்தில் உறுப்பினரொருவரின் கணக்கின் வரவுக்கிருக்கும் பணம் அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல் எவ்வாளுக்குச் செலுத்தப்படவேண்டுமோ அவ்வாள் ஒருவரை அந்த உறுப்பினர் பெயர்குறித்து நியமிக்கலாம். பெயர்நியமனமொன்றைச் செய்வதற்கு விரும்புகின்ற உறுப்பினரொருவர்-

(அ) திருமணஞ் செய்திருப்பின், அவரது வாழ்க்கைத்துணையையும் பிள்ளைகளையும் கூட்டாக அல்லது தனித்தனியாகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்;

(ஆ) திருமணஞ் செய்யாதவராகவிருப்பின், எவரேனுமாளைப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(2) ஏதேனும் பெயர்நியமனத்தைச் செய்வதற்கு விரும்பாத உறுப்பினரொருவர், தமக்கு நியமத்தர்கள் எவரும் இல்லையென நியமத்தர்கள் பற்றிய நிரலில் குறித்துரைப்பதன்மூலம் தமது உட்கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்தகையவொரு சந்தர்ப்பத்தில்,பணமானது, நாட்டின் ஏற்புடையற்பாலதான சட்டத்துக்கிணங்கப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) உறுப்பினர் எந்த ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த ஆணைக்குழுவின் தலைவரினது அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவரினது முன்னிலையிலும் அத்தகைய உறுப்பினரின் கையொப்பத்தைச் சாட்சிப்படுத்தவேண்டிய வேறோர் உறுப்பினரினது முன்னிலையிலும் அந்த உறுப்பினரினால் பெயர்நியமனமொன்று கையொப்பமிடப்பட்டிருந்தாலொழிய, அது செல்லுபடியுடைய தாதலோ அல்லது சட்டத்தில் எப்பயனையும் கொண்டிருத்தலோ ஆகாது.

(2) அத்தகைய ஒவ்வொரு பெயர்நியமனமும், விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவுக்கு அல்லது இயைபான உயர்கல்வி நிறுவனத்துக்கு உறுப்பினரினால் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆளொருவர் கையொப்பமிடுவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அவர், தமது கையொப்பத்துக்குப் பதிலாக,அந்த உறுப்பினர் எந்த ஆணைக்குழுவில் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த ஆணைக்குழுவின் தலைவரினதும் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையில் அவரது இடது பெருவிரலடையாளத்தை இடுதல் வேண்டும்; அத்தகைய பெருவிரலடையாளம் அத்தகைய பெயர்நியமனத்தைச் செய்த ஆளின் பெருவிரலடையாளம் என்ற பயன்பட அப்பெயர்நியமனத்தை அவர்கள் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

(4) எவரேனும் உறுப்பினரின் நியமத்தர் ஒருவர், ஓர் உறுப்பினரின் கையொப்பத்தை அல்லது பெருவிரலடையாளத்தைச் சாட்சிப்படுத்துதலோ அல்லது சான்றுப்படுத்துதலோ ஆகாது.

9. (1) ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் பெயர்குறித்துநியமிக்கப்படுமிடத்து, பெயர்நியமனத்தைச் செய்யும் உறுப்பினர், செலுத்தப்படற்பாலனவான நன்மைகள் அந்தந்த நியமத்தர்களினால் எந்த விகிதாசாரத்தில் பகிரப்படவேண்டுமோ அந்த விகிதாசாரத்தைப் பெயர்நியமனப்பத்திரத்தில் குறித்துரைக்கலாம்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் பெயர்குறித்துநியமிக்கப்படுமிடத்தும்,உறுப்பினரினால் செய்யப்பட்ட ஏதேனும் பெயர்நியமனத்தில் நியமத்தர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான பங்குகள் தொடர்பாகப் பணிப்பெதுவும் அவரினால் விடுக்கப்பட்டிராதவிடத்தும், செலுத்தப்படற்பாலனவான நன்மைகள் அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களுக்குச் சமமான பங்குகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

10. (1) பெயர்நியமனமொன்று -

(அ) ஒரு நியமத்தர் இருக்குமிடத்து, அந்த நியமத்தர் இறப்பதன்மேல்;
(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் இருக்குமிடத்து, அத்தகைய பெயர்நியமனத்தைச் செய்த உறுப்பினரின் ஆயுட்காலத்தின்போது அவர்களுள் எவரும் இறப்பதன்மேல்; அல்லது
(இ) உறுப்பினரொருவரின் திருமணத்துக்கு முன்னர் அவரினால் பெயர்நியமனமொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய உறுப்பினர் திருமணஞ் செய்வதன்மேல்,

இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓர் உறுப்பினரினால் செய்யப்பட்ட ஏதேனும் பெயர்நியமனம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுமிடத்து, பெயர்நியமனத்தைச் செய்த உறுப்பினர் புதியவொரு பெயர்நியமனத்தைச் செய்யலாம்.

11. (1) ஓய்வூதிய நிதியத்துக்கான உறுப்பினரொருவரின் நியமத்தர் ஒருவர்-

(அ) அவர், ஓய்வூதிய நிதியத்துக்கு உறுப்பினரொருவரின் உதவுதொகை செலுத்தும் காலப்பகுதியினுள் அத்தகைய உறுப்பினரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருப்பின்; அத்துடன்
(ஆ) உறுப்பினர் இறப்பதன்மேல்

மட்டுமே ஓய்வூதிய நிதியத்திலிருந்து கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) உறுப்பினர் இறக்கும் நேரத்தில் நியமத்தர் ஒரு பராயமடையாதவராகவிருக்கும் பட்சத்தில், ஓய்வூதிய நிதியத்திலிருந்து வருமதியான கொடுப்பனவு -

(அ) இறந்துள்ள உறுப்பினரின் மரணச்சொத்துத் தொடர்பாக இறுதி விருப்பாவண வழக்கெதுவும் இராதவிடத்து, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய நியமத்தரின் வரவுக்கு அரசாங்க அங்கீகாரம்பெற்ற வங்கியொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இறந்துள்ள உறுப்பினரின் மரணச்சொத்துத் தொடர்பில் இறுதிவிருப்பாவண வழக்கொன்று முடிவுறாதுள்ளவிடத்து,ஒரு நீதிமன்றக் கட்டளைமூலம் குறித்துரைக்கப்பட்ட முறையில் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(3) செல்லுபடியான பெயர் நியமனமெதுவும் இராதவிடத்து அல்லது, விடயத்துக்கேற்ப, நியமத்தர் அல்லது நியமத்தர்கள், உறுப்பினர் இறக்கும் நேரத்தில் இறந்துள்ளவிடத்து, இறந்துள்ள உறுப்பினரின் சட்டப்படியான மரபுரிமையாளர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

12. ஓய்வூதிய நிதியத்துக்கான பெயர் நியமனம், இருபதாண்டுகளைக் கொண்ட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்யாமல் உறுப்பினரொருவர் இறக்கும் பட்சத்தில் சட்டப்படியான மரபுரிமையாளர்களுக்கு ஓய்வூதிய நிதியத்தின் மீதியை விடுவிக்கும்போது மட்டுமே ஏற்புடையற்பாலதாதல் வேண்டும்.

**கணக்காய்வும் கணக்குகளும்**

13. (1) ஓய்வூதிய நிதியத்தின் நிதியாண்டு அரசாங்கத்தின் நிதியாண்டைப் போன்றதாகவே இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் ஓய்வூதிய நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வின் ஆகுசெலவு ஓய்வூதிய நிதியத்திலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது ஓய்வூதிய நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வுசெய்வதற்கு அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அவரது திணைக்களத்தைச்சேர்ந்த எவரேனும் அலுவலர், அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வு செய்யும் நோக்கங்களுக்காக அவசியமெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய அலுவலர் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் புத்தகங்களுக்கும் ஆவணங்களுக்கும் அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினாலும் செயலாளரினாலும், அத்தகைய நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாக அவர்களின் அறிவுக்குட்பட்ட அல்லது அவர்களினால் நிச்சயிக்கப்படற்பாலனவான அத்தகைய தகவல்களுடன்சேர்த்து கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி, ஓய்வூதிய நிதியத்தின் கணக்குகளைப் பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன், -

(அ) அவருக்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் அவர் பெற்றுக்கொண்டுள்ளாரா அல்லராவெனக் கூறுகின்றதும்;

(ஆ) அறிக்கையிற் குறிப்பீடு செய்யப்பட்ட கணக்குகள், ஓய்வூதிய நிதியத்தின் அலுவல்களினது உண்மையானதும் நியாயமானதுமான நோக்கை வெளிக்காட்டும்வகையில் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளனவாவெனக் கூறுகின்றதும்; அத்துடன்

(இ) அத்தகைய கணக்குகளின் ஏதேனும் பரிசோதனை தொடர்பில், அவரது அபிப்பிராயத்தில் பாராளுமன்றம் அக்கறைகொள்ளக்கூடிய அத்தகைய கணக்குகளிலுள்ள ஏதேனும் விடயத்துக்குக் கவனத்தை ஈர்க்கின்றதும்

ஆன வருடாந்த அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(5) ஆணைக்குழுவானது, மூன்றாண்டுகளுக்கொருதடவை அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக உயர்தொழிற்சார் காப்பீட்டு மதிப்புரீதியிலான ஆலோசகரொருவரை நியமித்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, ஓய்வூதிய நிதியத்தின் ஒப்பேறக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்கென, காப்பீட்டு மதிப்புரீதியிலான ஆலோசகரின் விதப்புரைகளின்மீது ஓய்வூதிய நிதியத்தின் நியதிநிபந்தனைகளைத் திருத்துவதற்கான அதன் உரிமைகளை ஒதுக்கி வைத்தல் வேண்டும்.

**உறுப்பினர்களினாலான வெளிப்படுத்துகையும் அறிவிப்பும்**

14. ஆணைக்குழுவின்,அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் ஊழியர் ஒவ்வொருவரும், ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துவதற்கு அவர் தகவுடையவராக வருகின்ற தேதியிலிருந்து மூன்றுமாதங்களினுள், பின்வரும் விபரங்களை, விடயத்துக்கேற்ப,ஆணைக்குழுவின் தலைவருக்குஅல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(i) ஓய்வூதிய நிதியத்தின் உறுப்பினராக வருகின்ற திகதியன்றுசெய்யப்பட்ட வெளிப்படுத்துகைகள்;

(ii) முழுப்பெயரும் பிறந்த திகதியும்;

(iii) திருமணஞ் செய்திருப்பின் திருமணத் திகதி;

(iv) கன்னிப் பெயருட்பட வாழ்க்கைத்துணையின் முழுப்பெயரும் (ஏற்புடையதாயின்);
(v) வாழ்க்கைத்துணையின் பிறந்த திகதி; அத்துடன்
(vi) ஒவ்வொரு பிள்ளையினதும் முழுப்பெயரும் பிறந்த திகதிகளும்.

15. ஒவ்வோர் உறுப்பினரும், அவரது திருமணத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பின்வரும் விபரங்களை எடுத்துக்கூறி, அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட படிவத்தில், விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவின் தலைவருக்கு அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவருக்கு வெளிப்படுத்துகையொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(i) அத்தகைய திருமணத் திகதி;
(ii) கன்னிப் பெயருட்பட வாழ்க்கைத்துணையின் முழுப்பெயரும் (ஏற்புடையதாயின்);
(iii) வாழ்க்கைத்துணையின் பிறந்த திகதி;
(iv) திருமணத்துக்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு பிள்ளையினதும் பிறந்த திகதி; அத்துடன்
(v) திருமணத்துக்கு முன்னர் பிறந்த ஒவ்வொரு பிள்ளையினதும் அல்லது பிள்ளைகளினதும் பெயர்களும் பிறந்த திகதிகளும்.

16. ஒவ்வோர் உறுப்பினரும், பின்வருவன இடம்பெற்றதிலிருந்து மூன்று மாதங்களினுள், விடயத்துக்கேற்ப,ஆணைக்குழுவின் தலைவருக்கு அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்:-

(i) வாழ்க்கைத்துணையின் இறப்புக் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகக் குடியியல் அந்தஸ்தில் மாற்றமேற்பட்ட திகதி;

(ii) ஒரு பிள்ளை பிறந்த அல்லது இறந்த திகதி.

17. ஒரு வெளிப்படுத்துகையில் அல்லது அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட தகவல்கள் பிழையானவை அல்லது பூரணமானவையல்லவென, விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவின் தலைவர் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவர் அறிந்திருக்குமிடத்து,ஆணைக்குழுவின் தலைவர் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவர் எழுத்திலான அறிவித்தல்மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய வெளிப்படுத்துகையில் அல்லது அறிவிப்பில் அடங்கியுள்ள எல்லா விபரங்களும் பற்றிப் போதிய எண்பிப்புடன் சரியான அல்லது பூரணமான தகவல்களைக் கொடுக்கின்ற மேலதிக வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும்படி அத்தகைய உறுப்பினரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய ஒவ்வோர் அறிவித்தலினதும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும்.

18. ஒவ்வோர் ஓய்வூதியம்பெறுநரும் ஒவ்வோராண்டும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர், ஓய்வூதிய நிதியத்திலிருந்து மாதாந்த ஓய்வூதியமொன்றைப் பெறுவதற்கான உரித்துடைமையைக் கூறி ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்திலான ஒரு வெளிப்படுத்துகையை ஆணைக்குழுவின் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எவரேனும் ஓய்வூதியம்பெறுநர் உரிய திகதிக்கு முன்னர் அவ்வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிக்கத் தவறினால், அத்தகைய வெளிப்படுத்துகை சமர்ப்பிக்கப்படும் வரை மாதாந்த ஓய்வூதியம் இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

### பொது

19. (1) இக்கட்டளைச்சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஓய்வூதிய நிதியத்தில் உறுப்பினரொருவரின் வரவுக்கிருக்கும் பணம், பின்வரும் சூழ்நிலைகளின்கீழ் ஏதேனும் கடன், முறி அல்லது உடன்படிக்கைக்கெதிரான அல்லது எவையேனும் வருமதிகளுக்கெதிரான பிணையாக எந்நேரத்திலும் பற்றுகைசெய்யப்படுதலோ அல்லது ஒதுக்கப்படுதலோ ஆகாது:-

(அ) உறுப்பினரொருவர் ஆணைக்குழுவினால், ஓர் உயர்கல்வி நிறுவனத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் அவரது நேர்மையீனம் அல்லது அசட்டை காரணமாக, ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி நிறுவனத்தினால் உறப்பட்ட ஏதேனும் இழப்பின் அல்லது சேதத்தின் தொகை;

(ஆ) விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவிடமிருந்து,உயர்கல்வி நிறுவனத்திடமிருந்து அல்லது வேறேதேனும் நிறுவனத்திடமிருந்து உறுப்பினரினால் எடுக்கப்பட்ட ஏதேனும் கடனின்மீது வருமதியான கொடுப்பனவுகள்;

(இ) உறுப்பினரினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் முறி, உடன்படிக்கை அல்லது வேறு சாதனத்தின்கீழான வருமதிகள்;

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்வையை அல்லது மன்றாணை முதலியவற்றை நிறைவேற்றுதல்.

(2) ஓராம் உப கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இருபதாண்டுகளைக் கொண்ட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்யாத அல்லது ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் ஓய்வுபெற்ற, பதவியிலிருந்து விலகிய அல்லது பதவியை முடிவுறுத்திய உறுப்பினரொருவருக்கு ஏற்புடையற்பாலனவாதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இந்த உப கட்டளைச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட உறுப்பினரொருவரிட மிருந்து ஏதேனும் தொகை கழிக்கப்படுமிடத்து, காலத்துக்குக்காலம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளின் மூலம் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொகையை ஓய்வூதிய நிதியத்திலிருந்து கழிக்கு முன்னர் அத்தகைய உறுப்பினரின் எழுத்திலான சம்மதம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

**பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்**

20. (அ) எவரேனுமாள் இக்கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட்பட ஓர் உறுப்பினராகவுள்ளாரா;

(ஆ) ஓர் உறுப்பினரின் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை என்ற முறையில் எவரேனுமாள் ஏதேனும் ஓய்வூதியத்துக்கு உரித்துடையவராகவுள்ளாரா;

(இ) எவரேனும் வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளை எந்த ஓய்வூதியத் தொகைக்கு உரித்துடையவராக விருக்கவேண்டுமோ அந்த ஓய்வூதியத்தொகை; அல்லது

(ஈ) கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்குக் குறித்தளிக்கப்படவேண்டிய கருத்து அல்லது பொருளமைப்பு,

என்பனபற்றி ஏதேனும் கேள்வி எழுமாயின், ஆணைக்குழுவின் தலைவர் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் தலைவர், அவர்களின் சொந்த முன்னெடுப்பின் மீது அல்லது அத்தகைய உறுப்பினரின், வாழ்க்கைத் துணையின் அல்லது பிள்ளைகளின் எழுத்திலான கோரிக்கையின் பேரில் அத்தகைய கேள்வியை ஒரு முடிபுக்காக ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் மீது ஆணைக்குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

21. கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக-

"சட்டம்" என்பது,1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருளாகும்;

"ஓய்வுபெறும் வயது" என்பது,ஓர் உறுப்பினர் தொடர்பாக, சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு ஆசிரியருட்பட ஊழியரின் ஓய்வுபெறும் வயது என்று பொருளாகும்;

"ஆணைக்குழு" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"தலைவர்" என்பது,-

(அ) ஆணைக்குழு தொடர்பாக, ஆணைக்குழுவின் தவிசாளர்;

(ஆ) ஒரு பல்கலைக்கழகம் அல்லது திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, துணைவேந்தர்;

(இ) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது உயர் கற்றலுக்கான நிறுவகம் தொடர்பாக, பணிப்பாளர்;

(ஈ) ஒரு வளாகம் தொடர்பாக, பல்கலைக்கழக முகவர்,
என்று பொருளாகும்;

"உயர்கல்வி நிறுவனம்" என்பது, ஒரு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது ஒரு வளாகம் என்று பொருளாகும் என்பதுடன் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு நிறுவகத்தையும் அல்லது உயர்கற்றலுக்கான ஒரு நிலையத்தையும் உள்ளடக்கும்;

"உறுப்பினர்" என்பது, ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துநராகவுள்ள ஆணைக்குழுவின் அல்லது ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் எவரேனும் நிரந்தரமான ஊழியர் என்று பொருளாகும்;

"ஓய்வூதியம்பெறுநர்" என்பது, இக்கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி மாதாந்த ஓய்வூதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவரும் பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்றவருமான ஓய்வூதிய நிதியத்தின் எவரேனும் உறுப்பினர் என்று பொருளாகும்:-

(i) ஓய்வுபெறும் வயது வரை இருபதாண்டுகளைக் கொண்ட அல்லது அதற்குமேற்பட்ட இடையீடில்லாத மற்றும் முனைப்பான சேவைக்காலத்தையாற்றியுள்ள ஊழியர்கள்;

(ii) இருபதாண்டுகள் அல்லது அதற்குமேற்படச் சேவைக்காலத்தையாற்றி ஓய்வுபெறும் வயதுக்கு முன்னர் சுகவீனம் காரணமாக ஓய்வுபெறும் ஊழியர்கள்;

(iii) இறக்கின்ற நேரத்தில் இருபதாண்டுகள் அல்லது அதற்குமேற்பட்ட சேவைக்காலத்தையாற்றியுள்ள ஊழியரொருவரின் தங்கிவாழுநர்கள்;

"ஓய்வூதிய நிதியம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழும் 1999 ஆம் ஆண்டு யூன் 10 ஆந் திகதிய 747 ஆம் இலக்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்கீழும் தாபிக்கப்பட்ட சகாய நிதியத்தின் பாகத்தைப் பயன்படுத்தி ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட நிதியம் என்று பொருளாகும்;

"சகாய நிதியம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பாகம் XII இன்கீழ் ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்ட சகாய நிதியம் என்று பொருளாகும்;

"சம்பளம்" என்பது, எவரேனும் உறுப்பினரினால் வகிக்கப்பட்ட நிலையான பதவியின் அல்லது நியமனத்தின் வேதனாதிகள் என்று பொருளாகும் என்பதுடன், அவரது சம்பளத்தின் பாகமாக அமைகின்றனவென ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்மூலம் வெளிப்படுத்தப்படக்கூடிய அத்தகைய எவையேனும் படிகளையும் உள்ளடக்கும்;

"செயலாளர்" என்பது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் என்று பொருளாகும்; அத்துடன்

"ஆசிரியர்" என்பது, சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நூலகரையும், பிரதி நூலகரையும், சிரேட்ட உதவி நூலகரையும், உதவி நூலகரையும் உள்ளடக்கும்.

**[கட்டளைச்சட்டம் 6]**

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| ஓய்வுபெறும் வயது | ஒவ்வொரு சேவையாண்டுக்காகவும் அரசாங்கத்தினாலும் அமைச்சரவையினாலும் அங்கீகரிக்கப்படுகின்ற கடைசியாகப் பெறப்பட்ட மாதாந்தச் சம்பளத்தின் நூற்றுவீதம் |
| 55 | 1.00% |
| 56 | 1.04% |
| 57 | 1.08% |
| 58 | 1.12% |
| 59 | 1.16% |
| 60 | 1.20% |
| 65 (ஆசிரியர்கள் மட்டும்) | 1.40% |

01-93

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.